# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,034 — 1934 ம் வரு மாசிமீ 23 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

"1924 ம் ஆண்டின் 9 ம் இலக்க கிராமச்சங்கச் சட்டம்."

1924 ம் ஆண்டின் 9 ம் இலக்க கிராமச்சங்கச் சட்டத்தின் 95 (1) (ix) ம் இலக்கத்தைக்கொண்ட திருத்திய பிரிவினூலும், 1931 ம் ஆண்டில் இலங்கை இராச்சிய மந்திரசபை சம்பந்தமாக ஆலோசனைச் சபையிற் செய்த கட்டளையின் 93 ம் அமிசத்தினூலும் தம்மீது வைக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக்கொண்டு தேசாதிபதியவர்களால் உண்டாக்கப்பட்ட, கிராமக் காரியஸ்தர் சபைகளின் அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தலைப்பற்றிய விதிகள்.

சாள்ஸ் பத்துவந்துடாவை,
சுவஸ்தான காரியபரிபாலன மந்திரி.

கொழும்பு,
1934 ம் வரு (பெப்ருவரி) மாசிமீ 13 ந் திகதி.

#### விதிகள்.

1. (1) இந்த விதிகளின் ஏற்பாடுகளின்படி நடத்தப்படும் அங்கத்தவர் தெரிவு எதையும் நடத்தும்பொருட்டாக பிரதான தலைமைக்காரன் அல்லாத வேறெந்த அரசாட்சியாரின் உத்தியோகஸ்தருக்கும் அதிகாரங் கொடுத்தனுப்புவது கவண்மேந்து ஏஜன்றருச்கு நியாயமுறையாகும்.

(2) இந்த விதிகளில் "அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர்" என்னும் சொற்கள் ஒரு அங்கத்தவர் தெரிவை நடத்தும் கவண்மேந்து ஏஜன்றர் அல்லது மேற்சொல்லிய பிரகாரமான நோக்கத்திற்காக அவரால் அதிகாரம் கொடுதத்தனுப்பப்பட்ட எந்த உத்தியோகஸ்தரும் எனப் பொருள்படும்.

2. (1) அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் நோக்கமாக பற்பல உவாட் பிரிவுகளிலும் உள்ள குடிபதியானவர்கள் கூடுவதற்காக ஒவ்வொரு கீழ்ப்பகுதிக்குள்ளும் வசதியான இடமொன்றை அல்லது பலஇடங்களை ஏற்படுத்துவதும்,

(2) அப்படி ஏற்படுத்தப்பட்ட இடமொவ்வொன்றிலும் எவரும் கண்டுகொள்ளாதபடிக்கு சம்மதச்சீட்டுப் பெட்டிகளில் சம்மதச்சீட்டுக் கடுதாசிகளை சம்மதச்சீட்டுக்காரர் போடத்தக்கதாக வேண்டியவைகளென்று தாம் காணும் வசதிகளை அமைத்துவைப்பதும் கவண்மேந்து ஏஜன்றரின் கடமையாகும்.

3. (1) அங்கத்தவர் தெரிவு எந்த உவாட் பிரிவின் விஷயத்தில் நடத்தப்படுகின்றதோ அந்த உவாட் பிரிவுக்குச்சேர்ந்த முறைமையாக யோக்கியதையுடைய ஒரு குடிபதியானவர் அல்லாத எவரையும் இந்த விதிகளின்படி நடத்தப்படும் எந்தக்கூட்டத்திலும் சம்மதிச்சீட்டுக் கொடுக்கவேனும் பங்கு பெறவேனும் விடப்படாது.

(2) அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்த்தருக்கு ஒரு அபேட்சகராக நியோகிக்கப்படும் எவரும், அல்லது எந்த அபேட்சகரதும் பெயரைப் பிரேரிக்கும் அல்லது அனுவதிக்கும் எவரும் அல்லது சம்மதிச்சீட்டுக் கொடுக்கத் தமக்கு உரித்துண்டு என்று சாதிக்கும் எவரும் இன்னூரென்பதை அறிந்துகொள்ளும் விஷயத்தில் அல்லது அவரது யோக்கியதைகளைப்பற்றிய காரியத்தில் எந்தக் கூட்டமும் நடத்தப்படும்போது உண்டாகும் ஒவ்வொரு விசார விஷயத்தையும் பற்றி விசாரணைசெய்து தீர்மானிக்க அதிகாரமிருத்தல் வேண்டும்; அக்காரியம் எதைப்பற்றியும் அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்த்தர் செய்துகொள்ளும் தீர்மானம், அந்த அங்கத்தவர் தெரிவின் சகல நோக்கங்களின் பொருட்டும் அந்த நோக்கங்களின் பொருட்டு மாத்திரமும் கடைசியானதும் முடிவானதுமாய் இருத்தல் வேண்டும்.

4. தெரிவை வேண்டி நிற்கும் அபேட்சகர் வாய்மொழி மூலமாய் நியோகிக்கப்படுதல் வேண்டும், ஒவ்வொரு பெயரும் உவாட் பிரிவில் உள்ள முறைமையாக யோக்கியதையுடைய குடிபதியானவர்கள் இருவரால் விதிப்படி பிரேரிக்கப்பட்டு அனுவதிக்கப்படுதல் வேண்டும்.

5. அவ்வண்ணம் நியோகிக்கப்படும் ஒவ்வொரு அபேட்சகரின் பெயரும் அவர் அங்கத்தவராக தெரிவுசெய்யப்படுவதற்குத் தாம் முன்னேறி வருவாரென்று, வாய்மொழி மூலமாகவேனும் எழுத்து மூலமாகவேனும் சம்மதி கொடுப்பாராகில் அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தரால் பிரேரிப்பவரதும் அனுவதிப்பவரதும் பெயர்களுடன் எழுதிவைக்கப்படுதல் வேண்டும்.

6. பெயர் அவ்வண்ணம் எழுதி வைக்கப்பட்ட அபேட்சகர் ஒருவர் மாத்திரம் இருந்தால் அக்கிராசனம் வகிக்கு முத்தியோகஸ்தர் அவ்வபேட்சகரை முறைப்படி தெரிந்துகொள்ளப்பட்ட அங்கத்தவரென்று வெளியரங்கமாக அறிவித்தல் வேண்டும்.

7. பெயர்கள் அவ்வண்ணம் எழுதி வைக்கப்பட்ட அபேட்சகர்கள் இருவர் அல்லது அத்தொகைக்கு மேற்பட்டவர்களாக இருந்தால், அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் :—

(1) அவர்களுடைய பெயர்களைத் தெரியப்படுத்தி, சம்மதிச்சீட்டிட்டு அவர்களில் ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டுமென்று கட்டளையிட்டு அவர்கள் ஒவ்வொருவரின் விஷயதிலும் அந்தந்த அபேட்சகருக்கான சம்மதிச்சீட்டுக் கடுதாசிகள் போடுவதற்கென்று வைக்கப்படும் சம்மதிச்சீட்டுப் பெட்டிகள் இவை இவையென்று காட்டும் நிறம் அல்லது பல நிறங்கள் சேர்ந்த கலப்பு இன்னதென்று குறித்துவிட வேண்டும்;

(2) எவரும் இலகுவாகக் காணக்கூடிய ஒரு இடத்தில் அபேட்சகர்களின் பெயர்களையும் அவர்களுக்கு முறையே குறித்துவிடப்பட்ட நிறங்கள் அல்லது பல நிறங்கள் சேர்ந்த கலப்புகளையும் விபரமாகக் காட்டும் ஒரு அறிவித்தலை ஒட்டுவித்து விடவும் வேண்டும்;

(3) *சம்மதிச்சீட்டுகள் இடுவதற்கான வெறும் பெட்டிகளை கூட்டத்திற் சமுகமாயிருப்பவர்களுக்குக் காட்டி அதன்பின் பெட்டி எதிலும் எச்சம்மதிச்சீட்டுக்காரனும் தனது சம்மதிச்சீட்டுக் கடுதாசியை எந்தப் பெட்டியிலும் போடும்போது எவரும் அவனைக் காண்பது கூடாதபடி யிருக்கத்தக்கதாக, அப்பெட்டிகளை வசதியான எந்த அறையிலாவது, அடைப்பிலாவது, அல்லது அதுபோன்ற வேறு இடத்திலாவது வைக்கவும் வேண்டும்.*

8. *மேற்சொல்லிய ஒழுங்குகள் அல்லது செய்யவேண்டியவைகளென்று தாமெண்ணும் வேறு ஒழுங்குகள் செய்து முடிந்ததின்மேல், அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் சம்மதிச்சீட்டிடுதல் தொடங்குகின்றதென்று வெளியரங்கமாகச் சொல்லி, ஒரு சம்மதிச்சீட்டுக்காரனுக அங்கே வந்து நிற்கும் ஒவ்வொரு யோக்கியதையுடைய குடிபதியானவனுக்கும் சம்மதிச்சீட்டுக் கடுதாசிகள் முறைப்படி கொடுக்கப்பட்டவைகளென்று உறுதிப்படுத்தும் நோக்கமாக அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட உத்தியோக அடையாளத்தை அதன் புறத்தில் உள்ளதாகிய ஒவ்வொரு சம்மதிச்சீட்டுக்கடுதாசியைக் கொடுக்கத் தொடங்கவேண்டும்.*

9. (1) *அதன்பின் சம்மதிச்சீட்டுக்காரன் அதிக காலதாமதமின்றித் தான் தெரிந்துகொண்ட அபேட்சகருக்கென்று குறித்துவிடப்பட்ட நிறம் அல்லது நிறங்கள்சேர்ந்த கலப்புப் பூசிய பெட்டிக்குள் அச்சம்மதிச்சீட்டுக் கடுதாசியைப் போடவேண்டும்*

(2) *சம்மதிச்சீட்டுகாரன் எவனும், சரீரபலக்குறைவினுல் அல்லது வேறெந்த நியாயத்தினுலும் ஒரு குறித்த நிறமுள்ள ஒரு சம்மதிச்சீட்டுப் பெட்டியை அது இன்னபெட்டிதானென்று அறிந்துகொள்ள இயலாதவனு யிருக்குமிடத்து, அச்சம்மதிச்சீட்டுக்காரன் தான் தெரிந்துகொண்ட அபேட்சகருக்கென்று குறித்துவிடப்பட்ட பெட்டியில் தனது சம்மதிக்கடுதாசியை போடக்கூடியதாயிருக்கும் பொருட்டு வேண்டிய பிரகாரம் அவனுக்கு விளங்கப்படுத்துவது அல்லது உதவிசெய்வது அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தருக்கு நியாயமுறையாகும்; ஆனுல் அப்படிச்செய்யுமிடத்து சம்மதிச்சீட்டுக்காரனை ஒரு குறித்த அபேட்சகருக்காகச் சம்மதிச்சீட்டு கொடுக்கும்படி புத்திசொல்லுவதாய் அல்லது கட்டளையிடுவதாய் அவன் விளங்கிக்கொள்ளக்கூடியதான தெதையும் அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் சொல்லவும்படாது அப்படியான செய்கை யெதையும் செய்யவும்படாது.*

10. *அக்கூட்டத்திற் சமுகமாயிருக்கும் முறைமையாக யோக்கியதையுடைய குடிபதியானவர்கள் யாவருக்கும் தங்கள் சம்மதிச்சீட்டுக்களைக் கொடுப்பதற்குத் தருணம் கொடுக்கப்பட்டதின்மேல், அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் :—*

(1) *விதிப்படி சம்மதிச்சீட்டிடுதல் முடிந்ததென்று வெளியரங்கமாகக் கூறி,*

(2) *அபேட்சகர்களின் சமுகத்தில் சம்மதிச்சீட்டுப் பெட்டிகளை திறந்து, அபேட்சகர்களுக்குரிய அந்தந்தப் பெட்டிகளில் உள்ள சம்மதிச்சீட்டுக் கடுதாசிகளை எண்ணி அல்லது எண்ணுவித்துக் கணக்கிட வேண்டும்.*

11. (1) *முறைப்படி கொடுக்கப்பட்ட சம்மதிச்சீட்டுக் கடுதாசிகள் எந்த அபேட்சகரின் பெட்டியில் மிகக் கூடிய தொகையாக இருக்கின்றனவோ அந்த அபேட்சகரே முறைப்படி தெரிந்துகொள்ளப்பட்டவராக வெளியரங்கமாக அறிவிக்கப்படவேண்டும்.*

(2) *முறைப்படி கொடுக்கப்பட்ட சம்மதிச்சீட்டுக் கடுதாசிகள் இரண்டு அல்லது அத்தொகைக்கு மேற்பட்ட அபேட்சகர்களின் பெட்டிகளில் ஒரேதொகையாகக் காணப்படுமாகில், அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் தமது நற்கருத்தின்படி விபரிக்கும் விதமாக அவர் தமது சமுகத்தில் திருவுளச்சீட்டு இடுவித்து அக்காரியத்தை தீர்மானிக்க வேண்டும். அத்திருவுளச்சீட்டு எந்த அபேட்சகர் பேரில் விழுந்ததோ அவரே முறைப்படி தெரிந்துகொள்ளப்பட்டவர் என்று வெளியரங்கமாய் அறிவிக்கப்பட வேண்டும்.*

12. *அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் சம்மதிச்சீட்டுக் கொடுப்பவர்கள் இன்னுர் என்று அறிந்துகொள்ளும் பொருட்டாகவும் அங்கத்தவர்கள் தெரிவகளை முறையாக நடத்தும்பொருட்டாகவும் வேண்டிய சகல காரியங்களையும் செய்வதுமன்றி, அளவுக்கு மிஞ்சிய நேரம் சம்மதிச்சீட்டுக் கொடுப்பதிற் செலவழியாமலும், சம்மதிச்சீட்டுக் கடுதாசிகளை மறைத்துவைத்தல், கொண்டுபோதல் அல்லது வீண் பிரயோகம்செய்தல் ஆகிய இக்குற்றங்களையும் அல்லது பெட்டிகளிற் தாவுவதையும் தடுக்கும் நோக்கமாக எந்த நேரத்திலும் சம்மதிச்சீட்டுப் பெட்டிகள் வைத்திருக்கும் அறைக்குள்ளும், அடைப்புக்குள்ளும, அல்லது இடத்துக்குள்ளும் போகலாம்.*

## காணி விற்பனவு.—பிழைதிருத்த அறிவித்தல்.

இத்தால் அறியத்தருவது 1934 ம் ஆண்டு மாசி மாதம் 2 ந் திகதியின் 8,030 ம் இலக்க இலங்கை அரசாட்சி "கெசற்" பத்திரிகையில் 4 ம் பகுதி, 26 ம் பக்கத்தில் காணப்படும் திரிகோணமலை 27 ம் நெம்பர் காணி விற்பனவு நொத்தீசில் "தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு" என்னுஞ் சொற்கள் "தரிப்பு விலை" க் காகப் பிழையாய் அச்சிடப்பட்டிருக்கின்றன.

நொத்தீசில் காணப்படும் விலை ஒரு துண்டின் தரிப்பு விலையேயன்றி ஏக்கர் ஒன்றின் தரிப்பு விலையல்ல.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1934 ம் ஆண்டு மாசிமீ 20 ந் திகதி.

சீ. வீ. பிறேயின்,
காணிக் கொம்மிஷனர்.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் றத்மலான வடக்கில் ஒகடவத்த றேட்டு அல்லது சமுத்திரசன்ன றேட்டுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 232. குறிச்சி—றத்மலான வடக்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | தோம்பககவத்த இறை வரி இல. 39 இன் பகுதி | தென்னங்காணி, 2 தென்னையும் 1 பருதி மரமும், ஓர் கட்டிய கானின் பகுதியும் வண்டில் பாதையின் பகுதியுமுள்ளது | எல். டி. இ. குணசேகரசாமினேயும், ஆர். பி. டி. ஜி. ருஜபக்சவும், ஆர். பி. டி. புஞ்சப்புவின் உரித்தாளருக்கும் உரியது | 0 | 0 | 3·88 |
| 2 | ஷை .. | தோட்டம், (வெறுங்காணி) ஓர் கட்டிய கானின் பகுதியுமுள்ளது | ஷை .. | 0 | 0 | 0 70 |
| 3 | தோம்பககவத்த இறை வரி இல. 84 இன் பகுதி | தென்னங்காணி, 3 தென்னையும் ஓர் கட்டிய கானின் பகுதியும் 2 வண்டில் பாதையின் பகுதியுமுள்ளது | எம். மார்த்தினு பெதிரு .. | 0 | 0 | 11·19 |
| 4 | ஷை .. | தென்னங்காணி, 2 தென்னையும், வண்டில்பாதையின் பகுதியும் அடிப்பாதையின் பகுதியும் உள்ளது | ஷை .. | 0 | 0 | 5·89 |
| 5 | ஷை .. | தென்னங்காணி, 2 தென்னையுள்ளது .. | ஷை .. | 0 | 0 | 3·38 |
| 6 | ஷை .. | தோட்டம், 1 கமுகுவும் ஓர் அடிப்பாதையின் பகுதி முள்ளது | சி. இ. பி. செனரத்தின, றத்மலான வடக்கு டி. பீற்றர் பெறிரு, றத்மலான தெற்கு | 0 | 0 | 3·44 |
| 7 | தோம்பககவத்த இறை வரி இல. 37 இன் பகுதி | தென்னங்காணி, 5 தென்னையும் 2 கமுகுவு முள்ளது | டி. எஸ். கணேகொட, பம்பலப்பிட்டி | 0 | 0 | 3·41 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஹூ சித்திரை மாசம் 6 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1934 ம் ஹூ மாசிமீ 19 ந் உ.

கார்ல் ஈ. ஆண்ட்,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஹ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சுதுவலிபொதயிலிருந்து பதகெடியவுக்கு ஓர் கரத்தைவழி என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 78. குறிச்சி—பதன.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 7 | — | .. அடிப்பாதை | .. டீ. எஸ். ஏ. டபிள்யு. குனவர்தன | .. 0 | 0 | 26·1 |
| 7A | — | .. ஷை | .. ஷை | .. 0 | 0 | 12 |
| 7C | — | .. ஷை | .. ஷை. | .. 0 | 0 | 12·1 |
| 7E | — | .. ஷை | .. ஷை | .. 0 | 0 | 2·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஹ ஏப்றல் மாசம் 24 ந் தேதியிலன்று 10 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1934 ம் ஹ பெப்ருவரிமீ 21 ந் உ.

ஜே. டீ. பிறவுண்,
அரசாட்சி ஏசண்டு.

———

1876 ம் ஹ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மருதோடையிலிருந்து சின்னப்பூவரசங் குளத்துக்குப் போகும் ரோட்டை விலத்தி எடுப்பதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப் படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 496. குறிச்சி—நொச்சிக்குளம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கட்டடித்தறை .. | நெல்வயல், இட்போ கிராமச் சங்க ரோட்டாகப் பாவிக்கப்படுகின்றது | நொச்சிக்குளம், இராமு நீலன். | 0 | 0 | 34·2 |
| 2 | ஷை .. | நெல்வயல், பழைய ரோட்டின் பகுதி சேர்க்கப் பட்டது | ஷை .. | 0 | 2 | 34·4 |

எடுத்துககொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஹ (மார்ச்சு) பங்குனி மாசம் 20 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு வவுனியா கோட்டு வீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

முல்லைத்தீவு கச்சேரி,
1934 ம் ஹ மாசிமீ 16 ந் உ.

ஜீ. டீ சொய்சா,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

இத்தா லறிவிப்பது வடமாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணக் கச்சேரியில் பின்னுற் சொல்லப்படும் துறை ஆயக்குத்தகை 1934 ம் ஆண்டு பங்குனி மாதம் 9 ந் திகதி தொடக்கம் புரட்டாதி மாதம் 30 ந்திகதி வரைக்கும் விலைக்கு வாங்குவதற்கான முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1934 ம் ஆண்டு பங்குனி மாதம் 8 ந் திகதி வியாழக்கிழமை மத்தியானம் 12 மணியளவில் ஏற்கப்படும்.

காரைதீவு.

2. ரூபா 50 கச்சேரியில் அல்லது இறைசேரியில் கட்டிய தற்கு அத்தாட்சியாக பெற்றுக்கொண்ட றிசீட்டுடன் ஒப் பந்தப் பத்திரங்கள் கேள்விக்காரரால் நேரே கொடுபட வேண்டும். கேள்விக்காறன் அல்லது விலைவைப்போன் தனது கேள்வியின்படி துறை ஆயக்குத்தகை விலைக்குக் கொடுக்கப்படுமென்று தீர்மானித்தவுடன் கேள்வித்தொகை யின் பத்திலொருபங்கைக் கட்டவும் விற்பனவு நிபந்தனை களுக்குக் கையொப்பமிடவும், அல்லது தேவையென்று காணும் பிணையைக் கேட்கும் நேரம் கொடுக்கவும் தவறி னால் ஒப்பந்தக்கேள்விக்காகக் கட்டிய பணமும் கேள்வித் தொகையின் பத்திலொருபங்கின் பேரால் கட்டிய பணமும் இழந்துபோவதுமன்றி தனது பெயரையும் குத்தகைப் பொருத்தங்களின்படி செய்யத்தவறியவர்களின் இடாப்பி லும் பதிவுசெய்வதற்கு ஏதுவாகும். ஒப்புக்கொள்ளப் பட்ட கேள்விக்காரன் அல்லது விலைவைப்போன் விற் பனவு நிபந்தனைகளுக்குக் கையெழுத்திட்டபின் கேள்விக் காரர் கட்டிய பணம் திருப்பிக் கொடுக்கப்படும். தபால் மார்க்கமாக அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்களும் குறிக் கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பின் கிடைக்கும் கேள் விப்பத்திரங்களுங் கவனிக்கப்படமாட்டாது.

3. ஒப்புக்கொள்ளப்படும் கேள்விக்காரன் கேள்வித் தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேண் டும். உத்தம தேசாதிபதியவர்களால் கேள்வி ஏற்கப்பட் டால் கேள்விக்காரன் தனக்கு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 20 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதி பெற்ற ஆதனப் பிணையேனும் காசாய் கேள்வித் தொகை யில் மூன்றிலொருபங்கு பிணையேனும் கட்டவேண்டும்.

4. கவண்மேந்து ஏசண்டர் விற்பனவிலன்று தீர்மானிக் கிற பிரகாரம் பாதைகளைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய பணத்தைப் பிணையாகக் கேள்விக்காரன் கட்டவும் வேண் டும்.

5. முடிக்குரிய தரணி பிணையாகக் கொடுபடும் உறுதி முத விபவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதிபோடுவ தற்கும் உரிய செலவு ஆதனங்களை விலைமதித்தல் முதலிய வைகளால் வரும் செலவும் பிணை உறுதிக்கு ஒட்டவேண் டிய முத்திரைச்செலவும் கேள்விக்காரன் கட்டவேண்டும்.

6. பிணையாகக்கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடு முதலியவைகட் குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில் நிலப்பதிவு கந்தோரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

7. யாழ்ப்பாண ஏசண்டரிடம் தேள்வையான மேலதிக மான விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம். போதிய கேள்வி கள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கப்பட்டவுடன் அன்றையத்தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

எஸ். எம். டவ்,
கவுண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1934 ம் ஆண்டு மாசிமீ 19 ந் உ.

## சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்கள்.

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டார‌து கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் மேற்கு பிரிவின் டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1934 ம் ஆண்டு பங்குனி மாதம் 20 ந் திகதியாகிய செவ்வாய்க்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிபட்டு அவ்விடத்திநின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,

சீ. ஜே. எஸ். பிரிச்செட்,
மேற்கு மாகாண பிஸ்காலுக்காக.

கொழும்பு பிஸ்கால் கந்தோர்,
1934 ம் ௵ மாசிமீ 19 ந் உ.

---

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டார‌து கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் இரத்தினபுரி டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1934 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 20 ந் திகதியாகிய செய்வாய்க்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்திநின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்.

சீ. ஈ. றில்னி,
சபரகாமு மாகாண பிஸ்காலுக்காக.

இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர்,
1934 ம் ௵ பெப்ரவரிமீ 19 ந் உ.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறையைச்சார்ந்த புலோலி தெற்கு ச. குமாரசாமி சுப்பிரமணியம் ஆகிய நான் புத்தள டிஸ்திறிக்கிலே தமிழ்ப் பாஷையிலே தொழில் நடத்தப் பிரசித்த நொத்தாரிஸ் ஆவதற்கு என்னைச் சேர்த்துக்கொள்ளும்படி பதிவுகாரியஸ்த தலைவர் அவர்களுக்கு 1934 ம் ஆண்டு வைகாசிமீ 23 ந் திகதிக்குப்பின், விண்ணப்பஞ் செய்ய எண்ணியிருக்கிறேன் என்பதை இதனால் அறிவிக்கிறேன்.

இப்படிக்கு,
ச. கு. சுப்பிரமணியம்,

புலோலி தெற்கு, பருத்தித்துறை,
1934 ம் ஆண்டு மாசிமீ 5 ந் திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.